padippakam

# பிரியநிலா

ප්‍රියනිලා

PRIYANILA

மலர்: 4 இதழ்: 16 ஜூன் - ஆகஸ்ட் - '94

ஆசிரியர்: உயன்வத்தை றம்ஜான்

அன்பளிப்பு: 10/-



Südasien Büro
Große Heimstr. 58
Dortmund

படிப்பகம்

padippakam



அடுத்து மலரவுள்ள
மீலாத் மலருக்கு
தரமான ஆக்கங்களை
இப்போதே
அனுப்பிவையுங்கள்
நல்லெண்ணம் கொண்ட
அபிமானிகளிடமிருந்து
மீலாத் மலருக்கான
விளம்பரங்களை பெருமனதோடு
எதிர்பார்க்கின்றோம்.
நல்லதொரு முயற்சிக்கு ஏன் கை
கொடுக்கக்கூடாது!

- ஆ+ர் -

படிப்பகம்

padippakam



# ப்ரியநிலா

**காலாண்டு கலை இலக்கிய இதழ்**

**ஆசிரியர்: 'ஸெளதுல் உம்மா' உயன்வத்தை றம்ஜான்**

**உதவி; திருமதி ஜெமீலா றம்ஜான்**

மலர்:4 இதழ்:16 ஜ¨ன், ஆகஸ்ட் 94


**ப்ரிய இலக்கிய இதயங்களே! சாந்தி உண்டாவதாக!**

ப்ரியநிலா தனது 15வது இதழை விரித்த போது நாட்டின் பல பகுதிகளிலிருந்து புதிய, பழைய முகங்கள் மிகுந்த பரவசத்தோடு வாழ்த்துக் கூறி உற்சாக மூட்டி எழுதிக் கொண்டனர். அனைவருக்கும் நன்றிகள் பல.

தெருத்தெருவாய், ரோணியோக்கள், சஞ்சிகைகள், மாதாந்த மாசிகை, காலாண்டு சஞ்சிகை என்றெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு சந்தைக்கு வந்தன. அப்போது மூத்த எழுத்தாளர் ஒருவர், 150 ரோணியோக்களின் பெயர் பட்டியல் ஒன்றை வாசித்துக் காட்டி ''ரோணியோ வாழுமா? என்ற கேள்வியை எழுப்பிய பொழுது அவருக்கு பலத்த எதிர்ப்பும் ஏற்பட்டது. ஆனால் ஜோசியம் பலித்துவிட்டது.

இந்நிலை எப்படி உண்டாயிற்று, என்ற வினாவோடு தேடுதல் நடத்திய போது, வாசகர்களின் தேவைகளுக்கு ஏற்ப சஞ்சிகைகள் வெளிவரவில்லை என்ற காரணம் ஒருபுறம் இருக்க ரோணியோக்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதியவர்களும், நடத்தியவர்களும் சில நேரங்களில் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொண்டதோடு, பொறுப்பில்லாமலும், இன்னும் சிலர் தாம் எழுதிய ஆக்கங்களை பிரசுரிக்க காலம் கிடைக்காமையால் தாமே தமது ஆக்கங்களைப் பல பெயர்களில் பிரசுரித்துக் கொள்ள முற்பட்டமையும், போதாக்குறைக்கு தரம் இல்லாத ஆக்கங்களைப் பிரசுரிக்க முற்பட்டமை, தமது பத்திரிகைகளுக்கு எழுதிய சில (குறிப்பாக) பெண் எழுத்தாளர்களோடு பேனா நண்பர்கள் போன்று நடந்துகொள்ள முற்பட்டமை, இலாபத்தை முக்கிய நோக்கமாக கொண்டு சஞ்சிகைகளை நடத்தியவர்கள், இலாபம் கிட்டாதபோது, பொறுமையை இழந்து கைவிட்டமை போன்ற கசப்பான தகவல்களை தெரிந்து கொள்ள முடிந்தது.

இத்தகைய தகவல்கள் ''ப்ரியநிலாவுக்கும் பெரிதும் உதவியாகவே அமைகின்றன.

கலை, இலக்கிய இதழான ப்ரியநிலா தொடர்ந்து வரவுள்ளதால், இலக்கிய ஆர்வம் கொண்டவர்கள் தரமான, எரியும் பிரச்சினைகளைக் கொண்ட படைப்புக்களை அனுப்புவதோடு அதன் வளர்ச்சிக்கும் உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஆ+ர்)

படிப்பகம்

padippakam

# உள்ளத்தின் உண்மை

டாக்டர் திரு. ஏ. சண்முகம், எம்.ஏ. பி.எச்.டி.

### அட்டாவதானம்

ஒருவனால் ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களில் ஒரே சமயத்தில் ஈடுபடும் திறன் உண்டு என்பது பொதுவான நம்பிக்கை. மிக்க திறமை வாய்ந்தவர்கள் எட்டுச் செயல்களில் ஒரே சமயத்தில் ஈடுபடக் கூடியவர்கள் என்பது சாதாரண நம்பிக்கை. இத் திறனைத்தான் 'அட்டாவதானம்' என்று குறிப்பர். சான்றாக பண்டைய கிரேக்க நாட்டு மன்னராகிய ஜூலியஸ் சீசர் (Julius Caesar)எட்டுப் பேர்களுக்கு ஒரே சமயத்தில் பல்வேறு வேலைகளைக் கொடுக்கும் திறன் வாய்ந்தவர் என்று கூறுவார்கள். கடிதத்தைச் சொல்லி எழுதவைப்பது (Dictation), மற்றொருவரிடமிருந்து அரசாங்கக் கணக்கைக் கேட்பது. இன்னொருவருக்குக் குறித்த செயலைச் செய்ய உத்திரவு இடுவது. பிறகு முன்னே சொன்ன வாக்கியத்தைத் தொடர்ந்து சொல்லி எழுதவைப்பது போன்ற செயல்களை ஒரே சமயத்தில் கவனித்துச் செய்யும் திறன் உடையவராகச் சீசர் விளங்கினார் என்பர்.

ஒருவன் ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களில் ஒரே சமயத்தில் கவனத்தில் ஆழ்கிறான் என்ற கருத்தில் உண்மை உளதா என உளவியலறிஞர்கள் ஆராய்ந்துள்ளார்கள். அவர்கள் கண்ட உண்மைகளாவன: ஒரே சமயத்தில் ஒருவன், ஒரு புதுப் பொருளிலோ அல்லது புதுச் செயலிலேதான் கவனத்தை நன்கு செலுத்த முடியும். ஒரே சமயத்தில் இருபுதுச் செயல்களிலோ அல்லது புதுப் பொருளிலோ கவனத்தைப் பிளந்து செலுத்த இயலாது. ஆனால் மிகவும் பழகிய செயல்கள் சிலவற்றில் ஒரே சமயத்தில் ஈடுபட இயலும். அதாவது, நடந்து கொண்டே ஒரு செய்யுளை வாய்விட்டுச் சொல்லலாம்; பேசிக் கொண்டே நூல் நூற்கலாம்; பாடிக் கொண்டே குளிக்கலாம். ஆனால், இவை போன்ற செயல்கள் பயிற்சியின் காரணமாகவே இயங்கும் செயல்களாகின்றன. அதனால், அவைகளில் ஈடுபடும் போது ஒருவனது கவனம் அவைகளில் பதிவதில்லை.

இரண்டு புதுச் செயல்களில் ஈடுபட்டால், இவைகளிரண்டிலும் நம் கவனத்தைப் பிளந்து ஆழ்ந்திருக்க முடியுமா என்று ஆராய்வோம். இத்துறையில் 1887 ஆம் ஆண்டிலேயே


படிப்பகம்

padippakam

ஆராய்ச்சிகள் தொடங்கப் பெற்றன. பவுஸ் ஹசன் என்பவர் பரிசோதனைகளைத் தம்மிடத்தேயே நடத்திச் சோதித்தார். அவர் குறித்த நேரத்திற்கு ஒரு செய்யுளை வாய்விட்டுச் சொல்லுவது, அதே சமயம் தெரிந்த மற்றொரு செய்யுளைத் தாளில் எழுதுவது ஆகிய இவ்விரண்டு செயல்களைச் செய்ய முனைந்தார். இதில் அவர் வெற்றி அடைந்ததாக அறிவித்திருக்கிறார். ஆனால் அவர் கண்ட உண்மைகளாவன; ஒரு செய்யுளுக்கான சொற்களை மற்றொரு செய்யுளில் புகுத்தினார். வாய்விட்டுச் சொல்லும் செய்யுளை விரைவாகச் சொல்லும் செயலை விரைவாகச் சொல்லும் போது எழுதும் செய்யுள் வேகம் குறைந்தது. அவ்வாறே எழுதும் செய்யுளின் வேகம் அதிகப்பட்டால் வாய்விட்டுச் சொல்லும் செய்யுளின் வேகம் குறையத் தொடங்கியது. அதாவது, ஒரே சமயத்தில் இரண்டு செயல்களைச் சமத்திறனோடு செய்ய இயலவில்லை என்பதைக் கண்டார். பவுஸ் ஹசன் கண்ட உண்மைகளையே பீனே, ஜேஸ்ட்ரேவ் போன்ற அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சிகளில் கண்டனர்.

சில தொழில்களில் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களில் ஈடுபடுவது இன்றியமையாததாகும். தட்டெழுத்தில் ஈடுபடுபவன் குறித்த பொருளைப் பார்க்க வேண்டும். அதே சமயத்தில் தட்டெழுத்தில் ஈடுபட வேண்டும்.

தொலைபேசி அலுவலகத்தில் தொழில் புரிபவர்கள் இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களில் ஒரே சமயத்தில் ஈடுபட வேண்டும். இவ்வாறு செய்பவர்களது திறனை அளவிடமுடியுமா என்று முயன்று இருக்கிறார்கள். இவ்வாறு செய்தவர்களில் ஒருவர் ஸ்டெர்சிங்கர் என்பவர். அவர் பரிசோதனை செய்பவருக்கு ஒரு கதையைப் படித்தவர். பிறகு, அக்கதையைச் சொல்லச் சொன்னார். அதில் எவ்வளவு பகுதி சரியெனக் கணக்கிட்டார். பிறகு வரிசை வரிசையாகக் கொடுக்கப்பட்ட எண்களை ஒரு நிமிடம் கூட்டும் படி செய்தார். இதில் எத்தனை எண்களைக் கூட்டினார் எனக் கணக்கிட்டுக் குறித்துக் கொண்டார். மூன்றாவதாக, கதையை வாய்விட்டுச் சொல்லுவது, எண்களைக் கூட்டுவது ஆகிய இவைகள் இரண்டையும் ஒரே சமயம் செய்யும் படி செய்தார். இவைகளையும் எண்களைக் கொண்டு மதிப்பிட்டார். பிறகு ஒரே சமயத்தில் இரண்டு செயல்களில் ஈடுபட்ட போது திறன் எவ்வளவு பாதிக்கப்பட்டது என்று கணக்கிட்டார். அது மிகவும் பாதிக்கப்பட்டதைக் கண்டார். முடிவாக இரண்டு தசைச் செயல்களை விடத் திறன் மிகுதியும் பாதிக்கப்படுகிறது எனக் கண்டுள்ளார்கள்.

**********


படிப்பகம்

padippakam

*மனோ வசிகரன் எழுதும் ...............*

# வாழ்வு சுவைக்கச் சில வழிகள்

## தொடர்

1. எம்மோடு சிலர் முரண்பட்டுக் கொண்டே இருப்பார்கள். நாம் இயன்றளவு சரிபடுத்திக் கொள்ளவே பார்க்க வேண்டும் இல்லாவிட்டால் என்ன! விட்டு விட வேண்டியதுதான். என்றாவது திரும்பி வருவார்கள்.

✱ பழங்களை, கீரைவகைகளை நாம் சாப்பிட வேண்டும் அவற்றிற்கு அலாதியான சக்தி இருக்கிறது. எமது சூழலில் கவனிப்பாரற்று எத்தனை பழவகைகள், கீரை வகைகள் இருக்கின்றன. அம்மாடி!

✱ சில சமயங்களில் துன்பங்கள் வரும். நாம் இயன்றளவு அவற்றை வெல்லப் பார்க்க வேண்டும். முடியாவிட்டால் பொறுத்துக் கொள்ள வேண்டும். ''இறைவன் பொறுமையாளர்களோடு இருக்கின்றானாம்'' (அதற்குப் பதிலாக இன்னொன்றைச் செய்யலாமா?)

✱ நாம் எம்மைத் தாழ்த்திக் கொள்ளக் கூடாது பணத்தால், மனத்தால், குணத்தால் இப்படிப் பலவற்றால்!

✱ நண்பர்களுடன் கலந்துரையாடல், நல்ல வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சுற்றுலாக்கள். இவை எமது வாழ்க்கைச் சுமையைக் குறைத்து கலகலப்பூட்டுவனவாகும்.

✱ எமது மேலதிக திறமைகள் இருக்குமே! அவற்றைப் பயன்படுத்தி சில வருமான வழிவகைகளை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் நாம் ஜொலிக்க முடியும்.

✱ எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் குழம்பாமல் அடுத்தவர் உதவியை நாடலாம். இவற்றிக்கு எமது சிந்தனை ''துருதுரு'' வென்று இருக்க நாம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். ஆரோக்கியத்தை அழிக்கும் பழக்கங்களை நாம் அழித்து விட வேண்டும். எவையென்று சொல்லவும் வேண்டுமா?

✱ எல்லாத் தேவைகட்கும் நாம் அலைந்து கொண்டிருக்காமல் ஒரு செய்தி அனுப்பல், ஒரு கடிதம் எழுதுதல், டெலிபோன், இப்படி எம்மை ஒழுங்கு பண்ணிக் கொள்ள வேண்டும்.

தொடரும்..........



படிப்பகம்

padippakam

# வரதட்சணை

கவிஞர் - ஏ. யூ. எம். ஏ. கரீம்

வரதட்சணைக் கொடுமையினால் வாழ்வில் என்றும்
வரட்சியினைக் காணுகின்ற சோகம் கேளீர்
வரதட்சணையில்லாமல் வாழ்க்கை தன்னில்
வக்கற்றுத் தவிக்கின்ற நிலைமை பாரீர்
வரதட்சணை வாங்கிடவே வாழ்க்கை தன்னை
வட்டியும் முதலுமாய் விற்று விட்ட
வரதட்சணைக் காரரினால் இன்று நாட்டில்
வறுமையதன் கோரமது வானை முட்டும்.

★★

பானையிலே அரிசியில்லை அடுப்பில் பூனை
பார்க்கின்ற இடமெல்லாம் வறுமைச் சேனை
காணையிலே ஆதரிப்பார் யாரு மில்லை
காக்கின்ற நிலையில்லாமல் பரிதவிப்போர்
தோணையிலே இறையோனின் துணை யில்லாது
தோன்றுகின்ற துன்பங்களை தவிர்ப் போரேது

★★★

சேனை பல திரண்டு வரும் திறனாய்த் தானே
சேர்ந்தருள்க இறைவனின் அருளைக் கோனே.
சோகமெலாம் ஒன்று சேர்ந்து சுவர்க்க வாழ்வை
சுளையோடு போக்குகின்ற அவலம் பாரீர்
போகமெல்லாம் விதைவிதைத்தும் அறுவடையின்றி
போய்விட்ட விவசாயி நிலையில் இன்று
தாகமெலாம் ஒன்று சேர்ந்து வறுமைக் கோட்டில்
தாங்கியே வாழ்கின்ற ஏழைப் பெண்கள்
சாகவே வழிகாட்டும் சமுகம் என்று
சஞ்சலத்தில் வாழ்வுதனை முடிக்க லானார்

★★★

கடனாளி யாகின்ற காட்சி தன்னால்
கார் பங்களாக் காரருக்கு மட்டும் வாழ்வை
திடனாகக் கையளித்த வரதட் சணையை
திரண்டு வந்து காளைகள் தானெதிர்க்க வேண்டும்
அடநாமும் இனிமேலும்தான் வாழ்வதென்றால்
அப்படியொரு நிலையவர்க்கு வாய்க்க வேண்டும்
விடமாட்டார் என்னும் நிலை வரதட்சணைக்கு
விடிவுதானது ஒரு நாளை விதித்துப் பார்ப்போம்

படிப்பகம்

padippakam

# தத்துவக் கவிஞன் அல்லாமா இக்பால்

முகம்மது முனாஸ் பீ.ஏ.

இலக்கியம் மனிதனின் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த கலையாதலின் அதற்கு வரைவிலக்கணம் வகுப்பது இலகுவன்று என்பது அறிஞர் பலர் ஒப்பிய உண்மையாகும். இலக்கியத்தின் உருவமும், உள்ளடக்கமும் பல்வேறு மொழிகளின் தன்மைக்கேற்பவும், காலச்சூழ்நிலைக ளுக்கேற்பவும் பல்வேறு நாடுகளின் வரலாற்றுப் போக்கிற்கேற்பவும் மாறுபட்டு வந்திருப்பினும் அதன் அடிப்படைப் பண்பு எப்போதும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இந்த அடிப்படைப் பண்பைத் தழுவியே உலகத்துத் தலைசிறந்த இலக்கிய கர்த்தாக்கள் அத்தனை பேரும் இலக்கியம் படைத்தனர். வங்காளப் பெருங்கவி தாகூரும், தீந்தமிழ் கவி புணைந்த அமரகவி பாரதியும், இஸ்லாமியம் பெருங்கவி இக்பாலும் இந்தப் பொதுவான இலக்கிய மரபைத் தழுவி இலக்கியம் படைத்தது மட்டுமன்றி தமக்கென தனியானதொரு இலக்கியக் கண்ணோட்டத்தையும் வகுத்துக் கொண்டனர்.

இக்பால் 'கலை' கலைக்காகவே என்ற கொள்கையைப் பலமாகக் கண்டித்தார். வாழ்க்கையை அழகுபடுத்தி நெறிப்படுத்தாத கலை கலையன்று என்பது அவரது வாதமாகும். இக்பால் கலையை சமுதாயச் சக்தியாக மதித்தார். இக்பாலின் சமுதாயம் பற்றிய கோட்பாடும், இலக்கியம் பற்றிய கண்ணோட்டமும், ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவாறு பிணைந்திருப்பதை நாம் காணமுடிகின்றது.

''தனிமனிதன் சமுதாயத்துள் தன்னை ஆழ்த்திக் கொள்ளும் பொழுது உயருகிறான். பெருமையடைய விழையும் சிறுநீர்த்துளி பரந்த கடலில் பரிணமிப்பதைப் போல'' என அஸ்ராரே குதி'' என்ற தனது நூலில் தனிமனிதனுக்கும், சமுதாயத்திற்குமிடையே உள்ள தொடர்பினை இக்பால் விளக்குகின்றார். எனவே இலக்கியம் என்பது வெறும் பொழுதுபோக்குக்காக கலையாகவன்றி சமுதாயத்தை நெறிப்படுத்தும் பண்பு கொண்ட தார்மீகக்கலையாக விளங்கல் வேண்டும் என்பது இக்பாலின் கருத்தாகும். வாழ்க்கையை செம்மைப்படுத்துவதும் அழகுபடுத்துவதும்தான் கலையின் தலையாக நோக்காக அமைதல் வேண்டும் என்ற கருத்தை பின்வருமாறு வலியுறுத்துகின்றார்.

அறிஞர்களே! அறிவைத் தேடல் வேண்டும் என்ற தாகமும், வேட்கையும் சிறந்ததுதான்.

ஆனால் பொருட்களின் யதார்த்த நிலையை
உணராத கலை கலையன்று
நித்திய வாழ்வு பெறுவதே அனைத்து கலை இறுதி இலட்சியமாகும்
அற்புதங்களன்றி இனங்களும் நாடுகளும்

padippakam

எழுச்சி பெறல் முடியாது.

மூஸாவின் அற்புத ஊன்றுகோலின் சக்தியற்ற
கலை, பலனற்ற கலையாகும்.

மனிதனின் ஆளுமையை (Personality) உயிர் துடிப்போடு இயங்கச் செய்கின்ற கலையே சிறந்த கலையாகும். மனிதனின் ஆளுமையை மழுங்கச் செய்யும் கலையினை இக்பால் வன்மையாகக் கண்டிக்கிறார்.

இக்பாலின் கலை, இலக்கியம் பற்றிய கோட்பாட்டிற்கும், அவரது குதி பற்றிய தத்துவத்திற்கும் நெருங்கிய தொடரபு உண்டு. இறைவனுக்கும், மனிதனுக்குமிடையே சம்பாஷனை' என்ற தனது கவிதை யொன்றில் இத்தத்துவம் சிறப்பாக விளங்கப்படுகிறது. மனிதன் இறைவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறுகின்றான்.

''இறைவா! நீ இரவைப் படைத்தாய்
நான் விளக்கைப் படைத்தேன்
நீ மண்ணைப் படைத்தாய்
நான் மட்பாண்டத்தைப் படைத்தேன்
நீ மலையை, கடலை, காட்டைச்
சிருஷ்டித்தாய்; நான் தோப்பையும்
தோட்டத்தையும், சோலையையும் அமைத்தேன்!
கல்லிலிருந்து கண்ணாடி செய்தேன்
விஷத்தை மூலிகையாக்கினேன்''

இக்பாலின் ''ஜாவிது நாமாவில்'' அவரது இலக்கியக் கோட்பாடு ''குதி'' என்ற தத்துவத்தின்டியாகவே எழுந்துள்ளது. என்ற உண்மை தெளிவாகப் புலப்படுகின்றது. பல்வேறு கிரகங்களிலும், பல்வேறு அறிஞர்கள், கவிஞர்கள், தத்துவஞானிகள் ஆகிய எண்ணற்றோரைச் சந்தித்து உரையாடுவதாக கவிஞர் கற்பனை செய்துகொள்ளும் பாணியில் இந்நூல் அமைந்துள்ளது. இக்பால் ஒரு கிரகத்தில் சமஸ்கிருதக் கவி பார்த்ருஹரியைச் சந்திக்கின்றார். கவிஞர் பார்த்ருஹரிடம் இக்பால் பின்வருமா வினவுகிறார்.

கவிதையின் வேகம் எங்கிருந்து வருகின்றது? இறைவனிடமிருந்தா? அல்லது நான் என்ற தன்மையிலிருந்தா?

பார்த்ருஹரி பின்வருமாறு பதிலளிக்கின்றார்.

''என் வாழ்க்கையின் 'மகிழ்ச்சி'' தேடவேண்டும் என்ற ஆசையில் இருக்கின்றது.

கவிதையின் வேகம் ''ஆர்வம்'' என்பதிலிருந்து பிறக்கின்றது.

இக்பாலின் கவிதைகள் வாழ்க்கையின் அடிப்படை உணர்வுகள் பற்றிப் பேசுகின்றன. எல்லா இனக்களுக்கும், எல்லாக் காலத்துக்கும் அடிப்படையான பொது உண்மைகளை மையமாக வைத்தே அக்கவிதைகள் இயற்றப்பட்டுள்ளன. அறிவாற்றலும் கவிதையுள்ளமும் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. இக்பால் இந்தப் பேற்றைப் பெற்றிருந்தார். அவர் கவிஞர் மட்டுமன்றி தத்துவ ஞானியாகவும் சிந்தனையாளராகவும் விளங்கினார்.

 படிப்பகம்

padippakam

# அகதிகளை அரவணைத்த அண்ணலார் தோழர்கள்

''ஜின்னாஹ்''

மக்கத்துக் காபீர்கள் கொடுமைகள் தாங்கொணா
மாநபித் தோழர் அன்று
தக்கதே இலையீங்கு தரித்திடல் என வோர்ந்து
தாயகந் தனைத்து றந்து
புக்கினர் மதீனமா நகரினை அகதிகள்
போலென அங்கு வாழ்ந்தோர்
மிக்கநல் லுபசாரஞ் செய்தனர் அதுதனை
மனங்கொள்ள வேண்டு மிந்நாள்

★★★

இல்லையென் றெவருமே சொல்லாது தம்மிடம்
இருப்பதிற் பாதி தந்தார்
சொல்லாலுந் துன்பங்கள் போக்கினார் அன்பினைச்
சொரிந்துமே மகிழவைத்தார்
நல்லதை அவர்களித் தவர்யெஞ்சிவைத்ததை
நயந்ததுமே உண்டு மகிழ்ந்தார்

★★★

வல்லோனின் தூதர்வழி காட்டிட அதுவாறு
வாழ்ந்தனர் அறிந்து வாழ்வோம்.
அள்ளிக் கொடுத்தவர் அகமகிழ்ந் தாரதை
அடைந்தவர் மனம் நிறைந்தார்
உள்ளதைப் பெற்றவர் உவந்தனர் தந்துமே
உதவியோர் மனம் நெகிழ்ந்தார்
எள்ளள வேனுமுள வேற்றுமை காட்டிலார்
யாரெவர் என்று நோக்கார்
வள்ளல்கள் தாமன்று மதீனாவில் வாழ்ந்தனர்
வழங்காதார் எவருமில்லையே

★★★

அகதிகளாய் வந்தே அனாதைகள் போல் வாழும்
அநியாயங் காணு கின்றோம்
தகுதியும் அந்தஸ்த்தும் பெற்றங்கு வாழ்ந்தவர்
தவித்திடும் நிலைமை கண்டோம்
பகைகொண்டு பிறர் செய்த பாவத்தினாலின்று
பராரிக ளாக வாழ்வோர்
வகையற்ற நிலைமாற வள்ளலிறை தூதரின்
வழிபற்றி உதவுவோமே

★★★

சொந்தமென் றுயிருடல் தமையன்றி மற்றெலாந்
துறந்திடம் பெயர்ந்து வாழ்வில்
நொந்துபோய் நமைநாடி வந்துளார் எம்மவர்
நலம்பேணல் நமது கடனே.
விந்தையே நாம் நபி நாதரை யவர்வழி
நலம் பெற்ற தோழர் தம்மை
சிந்தையில் நினைவுகொள் ளாமலே இருப்பது
சிறுமையிற் சிறுமையன்றோ.

padippakam

# இன்றைய மலையக கல்வி நிலையும் இளைஞர்களின் எதிர்காலமும்

**மக்கள் கலை ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை**

செல்வி. வை.முருகேசு, சென்ஜோன் டெல்ரி, நோர்வுட்.

வளர்ந்து வரும் இன்றைய விஞ்ஞான உலகில் இன்றுங்கூட மலையக மக்கள் கல்வியறிவை விருத்தி செய்து கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஆம், மலையகக் கல்வி என்பது ஏனைய பகுதிகளில் வாழும் மக்களின் கல்வி அறிவோடு ஒப்பிடும் போது மிகவும் பின்தங்கி காணப்படுவதாக அண்மை அரசாங்க ஆய்வுகள் கூட தெரிவித்துள்ளன. காரணம் இன்றைய மலையகத்தில் ஆரம்பக்கல்வியானதுதான் எதிர்காலத்தில் சிறப்பான ஒரு சமுதாயத்தினை உருவாக்க மூலப்பொருளாகக் தென்படுகின்றது. இருப்பினும் இந்த ஆரம்பக் கல்வி முறையாக போதிக்கப்படுவதில்லை. எனவே மலையக மாணவர்கள் உயர்வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கும் போது கூட எழுத்துப் பிழைகள், ஒழுங்கான உச்சரிப்பு இவற்றில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றனர்.

மேலும் குறிப்பாக தோட்டப்புர பாடசாலைகளில் ஆரம்பகால கட்டங்களில் பிரித்தானிய ஆட்சியிலும் அதன் பின்பும் வந்த அரசாங்கமும் மலையகக் கல்வியை அபிவிருத்தி செய்ய எவ்வித அக்கரையும் காட்டவில்லை. எனவே தான் எமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளின் உதவியோடு தோட்டப்புறங்களிலே பல பாடசாலைகளை கட்டியெழுப்பி கல்வி நிலை சிறப்படைய ஆவண செய்து வருகிறான். இதன் பயனாக இன்று மலையகத்தில் வித்தியாலயங்களும், மகாவித்தியாலயங்களும், காணப்படுகின்றன. இருப்பினும் இங்கு போதுமான வசதிகள் இல்லாமையினாலும், ஆசிரியர் பற்றாக்குறைகளினாலும், மாணவர்கள் அவதியுறும் நிலையைக் காணக்கூடியதாக உள்ளது.

அது மட்டுமின்றி மலையக மாணவர்கள் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றார்கள் என்றால் அதற்கு காரணம் அவர்கள் வாழும் சூழலும், வறுமையும், மற்றும் ஆசிரியர்களுமேயாகும். காரணம் நாளைய உலகிற்கு ஒரு நல்ல எழுத்தாளனை, ஒரு கவிஞனை, ஒரு கலைஞனை குறிப்பாக சொல்லப் போனால் நாட்டிற்கு ஒரு நல்ல பிரஜையான ஒரு கல்விமானை உருவாக்க வேண்டுமாயின் அது ஆசிரியர்களையே சாரும். ஆனால் இன்றைய மலையக ஆசியர்கள் பதவியை பெற்றவுடன் வேறு


படிப்பகம்

padippakam

நாடுகளுக்கோ அல்லது வேறு பிரதேசங்களுக்கோ சென்று விடுகின்றார்கள். எனவே, வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டு கல்விகற்பிக்கும் வசதிகளை செய்தாலும், அவர்களுக்கு இங்குள்ள மாணவர்களின் சூழலையோ மனநிலையையோ புரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. அது அவ்வாறிருக்க பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்புவதில்லை. அப்படி அனுப்பும் பெற்றோர்களும் பொருளாதார பிரச்சினைகளை சான்றாக வைத்து குடும்ப சுமையை பிள்ளைகளின் மேல் சுமத்தி விடுகின்றார்கள். இதனால் அவர்கள் கல்வி பாதிக்கப்படுகின்றது என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை.

கடந்த காலங்களைவிட இவ்விருபதாம் நூற்றாண்டில் எத்தனையோ மலையக மாணவர்கள் பல்கலைகழகம் என்ற வாசனையை நுகர்ந்து விட்டார்கள் என்றாலும், இவர்கள் தாம் கல்விகற்க உதவிய தாம் முன்னேற இலவசக்கல்வியை தந்துதவிய எமது தாய் நாட்டை மறவாது அவர்களைப்போல் மேலும், பல பட்டதாரிகளை உருவாக்குவார்களாயின், தமது தாய்நாட்டுக்கு கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். ஆனால் இன்றைய இளைஞர்களே தாம் பட்டதாரிகள் என்ற பட்டத்தைப் பெற்றவுடன் தமது தாய் நாட்டையும் மறந்து சம்பாதிக்கும் நோக்குடன் வெளிநாடுகளுக்கு சிறகடித்துப் பறந்து விடுகின்றார்கள். அதனால் மலையகப் பகுதிகளில் கல்விகற்றவர்கள் இல்லை என்ற நிலையே நிலவி வருகின்றது.

தற்போது மலையகம் கல்வியறிவில் முன்னேறி வரும் அதேவேளை ''வாசிப்பும் ஒரு மனிதனை பூரணமாக்கும்'' என்பதை மலையக மக்கள் அறிந்திருந்தும், அவர்களால் வாசிப்புத்திறனை வளர்த்துக்கொள்ள சந்தர்ப்பங்கள் வாய்ப்பதில்லை. பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதென்றால் பொருளாதார பிரச்சினை, வேறு புத்தகங்களை படிப்பதென்றால் ஒரு வாசிகசாலை வசதியில்லை, இதனால் நன்றாக படித்தவர்கள் கூட ''புத்தக பூச்சியாக'' இருந்து வருகின்றனர். எனவே, பொருளாதாரம், அரசியல் பற்றிய அறிவில்லாதவர்களாக இவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படலாம்.

அது அவ்வாறிருக்க பாடசாலைகள் தவிர்ந்த பிரத்தியேக நிறுவனங்களினாலும், பல மன்றங்களினாலும் நடாத்தப்படும் கைத்தொழில் போன்ற பயிற்சிகள் இங்கு வாழும் இளைஞர்களுக்கு மிகவும் பயன் அளிக்கக் கூடியதாகவும், மற்றும் அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வழிவகுக்கக் கூடியதாகவும் உள்ளன. குறிப்பாக, தலவாக்களைப் பகுதியில்


படிப்பகம்

padippakam

ஆரம்பிக்கப்பட்டு இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சியளித்து வரும் நிறுவனங்களை குறிப்பிடலாம்.

எனவே, இவ்வாறான சிக்கல்களிலிருந்து மலையக இளைஞர்கள் விடுபட வேண்டுமாயின், முதலில் ''பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்'' என்பது போல் எமது மலையக இளைஞர்கள் கூடுதலான சம்பளத்துடன் ஏதாவது தொழில் வழங்கப்பட்டால் உடனடியாக தமது கல்வியையும் குறிப்பாக தமது இலட்சியத்தையே மறந்து தொழிலில் ஈடுபட்டு விடுகின்றார்கள். ஆனால் இந்த பதவியும், பணமும் மனிதர்களை ஏமாற்றி படுகுழியில் தள்ளும் என்பதை அவர்கள் அந்த நேரத்தில் சிந்திக்க மறந்து விடுகின்றார்கள். இவ்வாறான நிலையில் அவர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும். அடுத்ததாக தாழ்ந்த எண்ணங்களையும், பாரம்பரிய பண்பாடுகளையும், கல்வியுடன் ஒப்பிட்டு எமது அறிவை பாழ்ப்படுத்தக்கூடாது. அத்துடன், அனைத்து பாடசாலைகளுக்கும் கல்வி கற்கத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுப்பதோடு ஆசிரியர்களுக்கு போதுமானளவு சம்பளமும் அவர்களின் வாழ்க்கைக்கு தேவையான வசதிகளையும் வழங்கி அந்தந்த பகுதிகளில் வசிக்கும் ஆசிரியர்களுக்கு அப்பகுதியிலேயே வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

அத்துடன் கல்விகற்ற அனைத்து இளைஞர், யுவதிகளுக்கு தகுந்த வேலை வாய்ப்பினை வழங்குவதோடு, போதுமானளவு வாசிகசாலைகள் அமைக்கப்பட்டு மக்களிடையே வாசிப்பு திறனை வளர்க்க ஆவன செய்ய வேண்டும். ஒழுங்கான, பொறுப்புள்ள, தம்மை சமூகச் சேவைக்கென ஈடுபடுத்தி உழைக்கும் ஆசிரியர்களைத் தெரிவு செய்ய வேண்டும். வசதி குறைந்த கல்வி கற்கும் ஆர்வத்துடன் இருக்கும் மாணவர்களுக்கு எவ்வகையிலாவது உதவி செய்ய வேண்டும்.

இவ்வாறு சகல அம்சங்களும் சீராக்கப்படுமாயின், மலையக மாணவர்களாகிய இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்களாக வென்ன உலகம் போற்றும் உத்தமர்களாகவும் உருவாக வழிவகுக்கும்.

✦ ''கற்று உழைத்து உயர்வோமாக'' ✦

**ப்ரியநிலா பற்றிய உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம். அது எம்மை உயர்த்த உதவும்.**

**உங்கள் யதார்த்த படைப்புக்கள் எம்மை வந்தடையட்டும். அதன் மூலம் நூறுமலர்கள் மலரட்டும் ப்ரியநிலாவின் வெளிச்சத்தில் அவை மின்னட்டும்.**



படிப்பகம்

padippakam

நூலகம்

# நூல் அறிமுகம்

இராசு இராமன்

**நூல்: தமிழ் இலக்கியப் பார்வையும் பதிவும்.**

**ஆசிரியர்:** கலாநிதி துரை மனோகரன்

**வெளியீடு:** நியூ கலைவாணி புத்தக நிலையம், கண்டி.

**விலை:** ரூபா 95/-

இந்நூலின் பதினாறு கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளில் இடம் பெற்றுள்ளன. அனைத்து கட்டுரைகளும் துரை மனோகரன் அவர்களின் ஆளுமை நிறைந்த எழுத்தாற்றலுக்கு எடுத்துக் காட்டாகும். இலக்கியத் தொடர்பான. தகவல்களை அறிந்து தெரிந்து கொள்ள உதவுகின்றன. இந்நூலாசிரியர் ஒரு நவீன எழுத்தாளர் என்பதை பழந்தமிழ் இலக்கியமும் நவீன இலக்கிய நோக்கும்'' என்ற முதல் கட்டுரையிலே அறிந்து கொள்ளலாம். இலக்கியத் தேடலில் ஈடுபட்டு இருப்போரும் மேல் வகுப்பு மாணவர்களும் பயன் பெற வாசிக்க வேண்டிய ஓர் தரமிக்க நூல்.

**நூல்: உரிமைப் போராட்டத்திலே உயிர் நீத்த தியாகிகள்**

**ஆசிரியர்:** ''மாத்தளை ரோஹான்''

**வெளியீடு:** குறிஞ்சி வெளியீடு,
129/25, செம்பட்டத்தெரு,
கொச்சிக்கடை,
கொழும்பு 13.

**விலை:** ரூபா 45/-

மலையக மக்களுடைய உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளின் வீர வரலாற்றலை மிக விரிவாக எழுதி நமக்கு வழங்கி உள்ளார் எழுத்தாளர் மாத்தளை ரோகினி அவர்கள். முல்லோ கோவிந்தன், டெவன சிவது இலட்சுமணன் மாத்திரமல்ல இன்னும் நாம் இதுவரை அறியாத பல வீரமிகுந்த உயிர்களின் இரத்தம் மலையக மண்ணில் சிந்தியுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அந்த மாமனிதர்களின் வீரமிகுந்த போராட்ட வடிவங்களை தரிசிக்க முடிகின்றது. இந்நூலை மாத்தளை ரோகினி என்ற புனைப் பெயரில் எழுதி இருப்பவர் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினர் கௌரவ டீ. ஐய்யாத்துரை என்பது குறிப்பிடத்தக்கது.


படிப்பகம்

padippakam

குறிப்பு:

நம் நாட்டின் தினசரிகளுள் ஒன்றான வீரகேசரியில் கடந்த 32 வருடங்களுக்கும் மேலாக கண்டி நிருபராகவும் பல்வேறு சஞ்சிகைகளில் எழுதி முத்திரை பதித்தவரும் மலைமுரசு மூலம் நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களை உருவாக்கிய வருமான திரு. க.ப. சிவத்தின் படத்தை பிரசுரித்து பரியநிலா வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

(ஆ-ர்)

## அட்டைப்படம்

# மலையகத்தின் ஒரு விடிவெள்ளி

**கலாநிதி துரை. மனோகரன்**

மலையகத்திற் க.ப. சிவத்தை தெரியாதவர்களே இருக்க இயலாது. அந்த அளவுக்கு மலையகம் எங்கும் பிரபலமானவர், க.ப. சிவம் என்ற கருப்பண்ணபிள்ளை பரமசிவம்.

பாடசாலை மாணவவராக இருந்தபோதே பேச்சுப் போட்டிகள், பட்டிமன்றங்கள் முதலானவற்றில் தீவிர பங்கெடுத்துக் கொண்டவர், அவர். 1949 களில் இலங்கைத் திராவிட முன்னேற்ற இயக்க ஈடுபாடு கொண்டவராக விளங்கினார்.

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக விளங்கிய பி.டி. இராஜனிடம் இலக்கியக் கல்வியை பெற்ற சிவம், ஆரம்ப காலங்களில் சில கையெழுத்துப் பத்திரிகைகளிலும் எழுதியுள்ளார். 1958ல், காலஞ் சென்ற மலையகக் கவிஞர் எஸ்.எஸ். நாதனின் பகுத்தறிவு என்ற ஏட்டில் ''மலையக மக்கள்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை அவர் எழுதியிருந்தார். பெ. சாமியின் நாம், சமூக முன்னேற்றம், வி.எஸ். முருகனின் உரிமைக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

கண்டியில் விழாக்களைச் சிறப்புற அமைப்பதிலும் க.ப. சிவம் ஈடுபாடு காட்டி வந்துள்ளார். 1959 ல் கண்டியில் அமைக்கப்பட்ட முத்தமிழ் மன்றத்தின் செயலாளராக விளங்கி, காலஞ் சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தலைமையில் முத்தமிழ் விழா ஏற்பாடுகளைச் செம்மையுறச் செய்தார்.

1959ல் அமரர் பி.டி. ராஜன் ஊட்டிய உற்சாகத்தின் விளைவாக மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் உதயமாகியது. இதன் கண்டிக்கிளைச் செயலாளராகச் சிவம் பணியாற்றினார்.


படிப்பகம்

padippakam

மேலும், கவிஞர் ஈழக்குமாரையும் இணைத்துக் கொண்டு, ''முத்தமிழ் முழக்கம்'' என்ற பெயரில் மாத இதழ் ஒன்றினைத் தொடங்கி மலையகத்தில் இலைமறைகாய்களான கலைஞர்களுக்கு தமது படைப்புகளை வெளியிடுவதற்கு களம் அமைத்துக் கொடுத்தார்.

1960 வரை வெளிவந்த முத்தமிழ் முழக்கத்தில் வெளியான சில அரசியல் கட்டுரைகள், கவிதைகளால் ஏற்பட்ட சில அரச தலையீடுகளால், அமரர் பி.டி. ராஜனின் ஆலோசனையின் பேரில் அவ்விதழ் மலைமுரசு என்ற பெயர் மாற்றத்துடன் மாத இதழாக வெளிவர ஆரம்பித்தது. மலைமுரசின் கூட்டாசிரியருள் ஒருவரான க.ப. சிவம், தமது ஆவல்தீர அவ்விதழில் எழுதிக் குவித்தார். அவற்றில் முதன் முறையாக மலையகச் சிறுகதை, கவிதை, நாடக, கட்டுரைப் போட்டிகளை, மலைமுரசு வாயிலாகக் க.ப. சிவம் நடத்தினார். ஏறத்தாழ எண்பது படைப்பாளிகள் உருவாகுவதற்கு மலைமுரசு களம் அமைத்தது.

மலையக வரலாற்றில் முதன் முறையாக மலையக எழுத்தாளர் சந்திப்பு ஒன்றினைக் கண்டியில் க.ப. சிவம் ஏற்பாடு செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதன் விளைவாக, மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் தோற்றம் பெற்றது.

1963ல் கண்டியில் சிவகலா மன்றத்தை ஆரம்பித்து பலரின் நாடகங்களை மேடையேற்றினார். இம்மன்றத்தின் மூலம் மருத்துவப் பேராசிரியரும், எழுத்தாளருமான நந்தியின் 'குரங்குகள்' என்ற நாடகத்தை கண்டியில் மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது.

1964 முதலாக வீரகேசரி பத்திரிகையின் கண்டி நிருபராகப் பொறுப்பேற்று, இன்றுவரை பத்திரிகைத்துறையில் ஈடுபாடு காட்டி வருகின்றார். கண்டியில் பல்வேறு பொதுப்பணி மன்றங்களிலும் ஈடுபாடு கொண்டு உழைத்து வருகின்றார்.

இத்தனை சிறப்புக்கள் வாய்ந்த க.ப. சிவம் கண்டியில் பலமுறை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார். 1986ல் கொழும்பில் இந்துக் கலாசார அமைச்சால் பத்திரிகை முன்னோடி என்ற பட்டமும், பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, 1992ல் கொழும்பில் நடைபெற்ற தமிழ்ச் சாகித்திய விழாவில் 'தமிழ்மணி' பட்டமும் பொற்கிழியும் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டார்.

எப்போதுமே மலையகம் பற்றிய உணர்வுடனேயே அவர் மேடைகளிற் பேசுவது வழக்கம். இலங்கையில் ஆக்ரோஷமான குரலில் (தொண்டை கிழிய என்றும் கூறலாம்) பேசும் இரு இலக்கியவாதிகளை நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. ஒருவர்,

*18ம் பக்கம் பார்க்க*



படிப்பகம்

padippakam

**மலையகத்தின் தொழில் முன்னோடியும் உழைப்பால் உயர்ந்து பொதுநல உதவியாளராக திகழ்ந்தவருமான லக்கிலேண்ட் பிஸ்கட் நிறுவன ஆரம்பகர்த்தா**

# அமரர் எஸ். இராமசாமி



மலையக பாட்டாளி வர்க்கத்தில் உதித்த சின்னசாமி அங்கம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வனாக மஸ்கெலியாவில் பிறந்த அமரர் சி. இராமசாமி ஆரம்ப கல்விக்குப் பின் கண்டி பிரதேசத்தில் உள்ள பிஸ்கட் தயாரிப்பு நிறுவனமொன்றில் சாதாரண விற்பனையாளராக பணியாற்றினார். மிகவும் இளம் வயதிலேயே விடா முயற்சியும் கடின உழைப்பும் இவரின் உயர்வுக்கு பெரிதும் அடிகற்களாக அமைந்தன. மலையகத்தில் நல்ல தொரு தொழில் நிறுவனத்தை ஆரம்பித்து பலருக்கு வேலைவாய்ப்பளிக்கவும் தேசிய ரீதியில் மிக தரமான உயர்ந்த பிஸ்கட்டுக்களை தயாரிக்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு மிக சிறிய அளவில் லக்கிலேண்ட் பிஸ்கட் தயாரிப்பு தொழிலகத்தை ஆரம்பித்த வர் அமரர் இராமசாமியாவார். இன்று நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் லக்கிலேண்ட் பிஸ்கட்டை ருசிக்காதவர்களோ அறியாதவர்களோ இல்லை என்ற அளவிற்கு வளர்ந்து விட்ட அமரர் இராமசாமியின் அரிய முயற்சியும் கடின உழைப்பும் மலையகத்தின் தொழில் முன்னோடிகளில் அவர் ஒருவராக திகழ்ந்ததோடு பொதுநல நோக்கில் தன்னை நாடியோருக்கெல்லாம் அன்பும் ஆதரவும் அளித்தவருமாவார்.

# எஸ். முத்தையா ஜே.பி.



அமரர் இராமசாமியின் உடன் பிறப்பான திரு. எஸ். முத்தையா ஜே.பீ. தனது சகோதரனின் வழிகாட்டலிலும் வாழ் வூட்டலிலும் லக்கிலேண்ட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்களில் ஒருவராக திகழ்கின்றார்.

செய்யும் தொழிலே தெய்வம் என்ற தனது இலட்சியத்தோடு பணிபுரிந்து வருவதோடு மிகவும் எளிமையாகவும்



படிப்பகம்

padippakam

எல்லோருடனும் மிக அன்பாக பழகுபவராகவும் விளங்கும் இவர் கலை, இலக்கிய, சமய, சமூக மற்றும் ஏழை எளியவர்களுக்கு அன்புடன் உதவுபவரும் பொதுநல உதவியாளருமாவார்.

## திரு. மனோகரன்

அமரர் இராமசாமியின் ஒரே புதல்வரான திரு. மனோகரன்அவர்கள் தனது தந்தையின் வழியில் அவர் ஆரம்பித்த தொழிலகத்தை மென்மேலும் முன்னேற்றும் பணியில் இயக்குனராக மட்டுமின்றி பல்வேறு பொது துறைகளிலும் ஈடுபாடு கொண்டவராகவும் நல்லார்வமும் சமுதாய சமூக நாட்டமும் கொண்டவராகவும் திகழ்கின்றார். இவர் ஒரு பட்டதாரியுமாவார்.

## முத்தையா முரளீதரன்



இன்று உலகின் எட்டாவது சிறந்த சுழல் பந்து வீச்சாளராகத் திகழும் திரு. முத்தையா முரளீதரன் அமரர் இராமசாமியின் தம்பி எஸ். **முத்தையாவின்** மூத்தப் புதல்வ ராவார். அகில உலகிலும் **முத்தையா முரளீதரன்**பெயர் உச்சரிக்கப்படுகின்றது. உலகின் ஒரேயொரு மலையக தமிழ் கிரிக்கட் வீரனாகவும், உலகின் அதி அற்புத சுழல் பந்து வீச்சாளானாகவும், மிக வும் இளவயதிலேயே 50 விக்கட்டுக்களை வீழ்த்திய சாதனையாள ராகவும் விளங்கும் நமது தேசிய விளையாட்டு வீரர் முத்தையா முரளீதரன் பிறந்ததும் கண்டி குண்டசாலையில் என்பதையிட்டு பெருமையடைகின்றோம். உலக சாதனைகள் பலவற்றை நிலைநாட்டி நம் நாட்டின் பெயரையும் புகழையும் அகிலமெல்லாம் நிலைநாட்டி மலையக இந்திய வம்சாவளி மைந்தனாம் ஸ்ரீ லங்காவின் புகழ் சேர் பெருமகன் **முத்தையா முரளிதரன்**வாழ்க! வளர்க! வெல்க!


படிப்பகம்

padippakam

# அட்டைப் பட நாயகன் பற்றி இவர்கள்

மலையகத்தின் இன உணர்வு மிகுந்த படைப்புக்களைத் தாங்கி வந்த "முத்தமிழ் முழக்கம்" தடைசெய்யப்பட்ட போது "மலை முரசு" என்ற சஞ்சிகையை ஆரம்பித்து பல புனைப் பெயர்களில் எழுதியதோடு, இன்று, மலையகத்திலும் நாட்டின் பல பாகங்களிலும், புகழ் பூத்த எழுத்தாளர்களாகத் திகழும் அனேகருக்கு எழுத்துத் தளம் அமைத்துக் கொடுத்தவர். அறுபதுகளின் ஆரம்பத்தில் ததும்பி வழிந்த மொழி உணர்வையும், இலக்கிய ஆர்வத்தையும் எழுத்துருவில் தர சகல எழுத்தாளர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்தார்.

தேசிய சுவடிக் கூடத் திணைக்களத்தில் 'மலைமுரசு' இதழ் குறித்து, எந்தவிதமான பதிவும் இல்லை. எதிர்காலத்தில் இலக்கிய வரலாறு குறித்து கவனம் செலுத்துவோருக்கு தகவல் இல்லாத நிலை ஏற்படும். எனவே, "ப்ரியநிலா" க.ப. வின் படத்தை அட்டையில் தாங்கி வருவது பாராட்டுக்குரியதாகும்.

***சாரல் நாடன்***

"ஹலோ சார், எப்படி என்பார் அவர். தாங்யு சிவம் என்பார் மற்றவர். இது நாள்தோறும் நண்பர் சிவத்தின் வாயிலிருந்து வரும் சொற்களாகும். கவிஞர் எஸ்.எஸ். நாதனின் பகுத்தறிவு வி.எஸ். முருகனின் உரிமைக்குரல் சாமியின் சமூக முன்னேற்றம், நாம் ஆகியவற்றின் எழுத்தாளரும், முத்தமிழ் முழக்கம் "மலைமுரசு" ஆகியவற்றின் ஆசிரியரும், நாடறிந்த பத்திரிகையாளர், எழுத்தாளர் குறிப்பெடுக்காமலேயே செய்தி சேகரிப்பதில் வள்ளவர் க.ப. சிவம் அவர்கள். 1964 முதல் இன்று வரை வீரகேசரி நிருப்ராக இருந்து வருகிறார்.

மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் மத்திய மாகாண இந்து மாமன்றம், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், மலையகக் கலை இலக்கியப் பேரவையின் ஆரம்ப அங்கத்தவர், நாடறிந்த எழுத்தாளர், பத்திரிகையாளர் க.ப. சிவத்தின் படம், ப்ரியநிலா அட்டையில் இடம்பெறுவது மிகப் பொறுத்தமே. தமிழ் என்றால் விட்டுக் கொடுக்காதவர், எளிமையானவர் பழகுவதற்கு இனியவர் மலையகத்தின் மண்வாசனையையும், மக்களையும் உலகறியச் செய்ய மலையக எழுத்தாளர்கள் பலர் உருவாக களம் அமைத்தவர். அவர் பாராட்டப் பட வேண்டியவர்.

***ஐ. ஏ. ரஸ்ஸாக்,***
***பத்திரிகையாளர்,***
***கண்டி.***



படிப்பகம்

padippakam

## எனது பார்வையிலே திரு க.ப. சிவம்

இவரை எனது பாடசாலைப் பராயம் தொட்டுத் தெரியும். மலையக எழுத்துலக முன்னோடிகளுள் ஒருவர். காட்சிக்கு எளியவர். பழகுவதற்கு இனியவர். நக்கீரர் பரம்பரை - நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்பார். காற்றடிக்கும் பக்கம் சாயாத கொள்கை பிடிப்பு மிக்கவர். வெறித்தன்மை அற்ற இவர். மொழி, இன, மத உணர்வு மிக்கவர். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்பார். இவர் எங்கோ பிறக்க வேண்டியவர். மலை முரசு மூலம் மலையக எழுத்தாளர்களை இனங் காட்டிக் கொடுத்தவர்.

**திரு. சி. நடராஜா BSc (Dip in Ed)**
***அதிபர், அசோகா வித்தியாலயம், கண்டி.***

திரு. க.ப. சிவம் தமது சிறுவயதிலேயே சமூக சீர்திருத்தவாதியாகவும், மலைநாட்டு வாலிபர்கள் தவறான வழிகளில் செல்லாது பாதுகாப்பதற்காக கண்ணாய் இருந்தவர். இளைஞரிடையே நல்லெண்ணத்தையும், சமூக உணர்வையும் மொழிப் பற்றையும் இரத்தத்தோடு கலக்கச் செய்தவர். 1960ல் திரு பி.டி. ராஜன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது, திரு சிவத்தின் தமிழ் அறிவையும். சமூக உணர்வையும் கண்டு, அவரை இச்சங்கத்தில் இணைத்துக் கொண்டதோடு மலை முரசை வெளியிடவும் வகை செய்தார்.

இளைய தலைமுறையினரை மலையகத்தில் ஒளிச்சுடர்களாக்கிய பெருமை திரு க.ப. வுக்கும் உண்டு.

வாழ்க சிவம், வாழ்க அவர் நாமம்.

***திரு. கே. செல்லமுத்து, கண்டி.***

### 14ம் பக்கத் தொடர்ச்சி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டொமினிக் ஜீவா; மற்றவர், மலையகத்தைச் சேர்ந்த க.ப. சிவம். மலையகம் பற்றிய உணர்வு, சிவத்தின் உதட்டிலும், உள்ளத்திலும் மட்டுமல்லாது, அவரது நாடி நரம்புகளிலும் ஊறிவிட்டது.

பத்திரிகையாளராகவும், இலக்கிய ஆர்வலராகவும் சமூகத் தொண்டராகவும், மலையக அபிமானியுமாக விளங்கும் க.ப. சிவம் 'ப்ரியநிலா' மூலம் கௌரவிக்கப்படுவது, அவரை அறிந்த எல்லோருக்கும் இதயநிறைவைத் தருவதாக அமையும். அவரைப் புதிதாகத் தெரிந்து கொள்வோருக்கும் அவர் பற்றிய நல்லதொரு கணிப்பை ஏற்படுத்தும்.



படிப்பகம்

padippakam

# மலையக எழுத்தாளர்களின் உந்து சக்தியாய் க.ப.சிவம்

**அந்தனிஜீவா**

மலையக இலக்கிய வரலாற்றில், இரண்டு தலைமுறைக ளிடையே இலக்கியப் பணியாற்றிய பெருமை க.ப.சிவத்தையே சாரும். மலையக இலக்கியத்தை வளர்த்தெடுப்பதற்காக அறுபதுகளிலே ஓர் ஆர்வமிக்க பரம்பரை முன்வந்தது. அதன் முன்னணி வரிசையில் இருந்தவர்களில் ஒருவர் க.ப.சிவம்.

இவரும் மு.கு.ஈழக்குமாரும் இணைந்து நடத்திய ''மலைமுரசு'' சஞ்சிகை மலையக எழுத்தாளர்களுக்கு களம் அமைத்து உந்து சக்தியாக விளங்கியது. சாரல் நாடான், தெளிவத்தை ஜோசப் போன்றவர்களின் இலக்கியப் பயணம் அந்த சஞ்சிகையிலேதான் தொடங்கியது.

அறுபதுகளில் எத்தகைய உற்சாகத்துடன் செயல்பட்டாரோ அதேபோல எண்பதுகளில் மலையக கலை இலக்கிய பேரவையுடன் இணைந்து தன்பணியை தொடர்கிறார் க.ப.சிவம்.

கடந்த கால்நூற்றாண்டுகளுக்கு மேலாக ஒரு முழுநேர பத்திரிகையாளரான க.ப. சிவத்தின் அனுபவமும் வரலாற்றுப் பதிவுகளாக வெளிவரவேண்டியது அவசியமாகும். மூத்த கவிஞர் அமரர் சி.வி. முதல் இன்றைய இளைய தலைமுறையின் முன்னோடிக் கவிஞர் முரளீதரன் இரண்டு தலைமுறையி னரிடையே இன்றும் இளைஞனைப்போல செயல்படும் க.ப. சிவத்தின் பங்களிப்பு கௌரவப்படுத்த வேண்டியதொன்றாகும்.

## இலங்கையில் பிரசித்திபெற்ற சித்திரக்காரர்கள்

**-நஸீமா பேகம், தும்புளுவாவ - மு/வி**

1. சோலியஸ் மென்டிஸ் :- களனி விகாரையில் சித்திரங்களை வரைந்தவர்.

2. எம். சார்ளிஸ் :- பௌத்த தேசிய பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த சிறந்த ஓவியர்.

2. ஜே.டீ.ஏ. பெரேரா :- இலங்கை அரசநுண்கலைக் கல்லூரியை நிறுவியவர்.

4. ஜோர்ஜ்கீற் :- கொழும்பு கோதமி விகாரையில் சித்திரங்களை வரைந்தவர்.

5. எல்.ரீ.பீ. மஞ்சுஸ்ரீ :- புதுப்பாணியை விரும்பிய பாராளுமன்றத்தில் சித்திரங்களை வரைந்தவர்.

6. ஏ.ஸீ.ஜீ.எஸ். அமரசேகர முதலியார் :- உயிர் உருவங்களை வரைவதில் கைதேர்ந்தவர்.

7. ஹென்றி தர்மசேன :- பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டபத்துக்கு முன்னே அவுக்கண சிலையை உருவாக்கிய, எம். சார்ளிஸ் இன் சிஷ்யர்.



படிப்பகம்

padippakam

# பெரியார் பெரியான் பிள்ளைக்கு கண்ணீர் அஞ்சலி



மனிதருள் மாணிக்கமாய்த் திகழ்ந்து மனிதப் பண்புகளை அணிகலனாகக் கொண்டு இன, மத வேறுபாடின்றி குணமொன்றே சகல சொத்தெனக் கருதி இரவு பகலென்று கருதாது காரியத்தைச் செய்து முடிப்பதே கடமையெனக் கொண்டு தெளிந்த சிந்தனையோடு தெய்வ பக்திமிக்கவராய் வாழ்ந்த வறக்காப் பொளை பனானையைச் சேர்ந்த பெரியார் எஸ்.ஒ. பெரியான் பிள்ளை அமரமத்துவம் அடைந்த செய்தி தாங்கிக் கொள்ள முடியாதொன்றாகும்.

சகல இன மக்களினதும் உயர்வுக்காக கல்வி, கலை, கலாச்சார மேம்பாட்டுக்காக பிரதேச அபிவிருத்திக்காக களங்கரை விளக்காக பனானைப் பகுதியின் தீபமாகத் திகழ்ந்தவரும் நேர்மையாகவும், கண்ணியமாகவும், இவ்வுலகில் நம்முடன் வாழ்ந்துவிட்டு அமரத்துவம் எய்திய பெரியார் பெரியான் பிள்ளையின் ஆத்மா சாந்தி அடைய கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம்.

**கேகாலை கோகிலா**

---


இனிய இதயங்களே!

***ப்ரியநிலா உயிர்வாழ, வளர இலக்கிய உலகிற்கு சேவை புரிய அதற்கு மாலையிடுங்கள், சந்தாதாரர்களாக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.***

*வருட சந்தா 120/-* *அரை ஆண்டு சந்தா 60/-*

*தனிஇதழ் 10/-* *வெளிநாடு 400/-*

*1/2 ஆண்டு 200/-*

***193, உயன்வத்தை, தெவனகல்ல.***




படிப்பகம்

padippakam

# ஒன்றரைநாள்

**அம்பன்பிட்டி பிரேமநாதன்.**

அதிகாலை ஐந்து மணியிருக்கும்.

''பாசிப்பயிறு பருப்புருண்டை பலகாரம் தின்பேன். பத்து பேரு வந்தாலும் நான் பயப்பட மாட்டேன்.. நான் பயப்படமாட்டேன்.

இது தொங்கவீட்டு அடுப்பு கறுப்பையாவின் காலைப் பாட்டு!

முன்பு ஸ்டோர் அடுப்பில் வேலை செய்தமையால் 'அடுப்பு' கறுப்பையா என்ற காரணப் பெயரையும் அவர் பெற்றிருந்தார். வயது எழுபது இருக்கும். அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் இந்தப் பாடலை திரும்ப திரும்பப் படிப்பது வழமை. இவரது குரலைக் கேட்டதுமே தொங்கலயத்து ஆட்களோ எழும்பி விடுவார்கள்.

பிரட்டுத் தப்பு ஒலி கேட்டாற்போல 'அடுத்த வீடு' இப்பதான் சாப்பிடுராப்போல; கேட்பது தொங்க வீட்டு பெருமாயி எட்டு மாதக் கர்ப்பினி.

'ரொட்டி' தட்டுவதும் 'சம்பல்' அரைப்பதுமாக லயத்தில் ஒரே பரபரப்பு! தீபாவளிக்கு முன்னிரவைப் போல!

விடிந்தால் 'போயா' நாள். ஒன்றரை நாள் பேர்.

மாதத்தில் 'போயா' உட்பட நாலு ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்தால் தான் ரேசனுக்காவது கட்டிவரும்.

சீக்கு இருந்தாலும் விடுமுறை நாட்களை விட்டு விடுவதில்லை.

பெண்மைக்கு பெருமை தரும் கர்ப்பினித் தோற்றத்தோடு வெட்டுக்கு அவசர அவசரமாகப் புறப்படுகிறாள் பெருமாயி. காணி தேடி வவுனியாவுக்குச் சென்றிருந்த கணவன் இன்னும் வீடு வந்து சேரவில்லையே என்ற கவலை ஒரு பக்கம்.

தனது ஒன்றரை வயதான குழந்தைக்கு பால் இல்லாக் குறை மறு பக்கம்.

இப்போதெல்லாம் குழந்தை பருகுவது 'கொத்தமல்லி தண்ணீர்தான்' அது பழக்கப்பட்ட விசயமாச்சே!

எப்படியும் இன்றைக்கு பேர் போட்டால் தான் ரேசனுக்காவது சரிவரும். இல்லாவிடில் செக்ரோல் கடன்தான். இன்னும் இரண்டு மாதத்தில் இன்னொரு குழந்தை. இந்தப் பயணமுனா ''ஒப்பரேசன்'' செஞ்சுடனும். அதுக்கு கூட எறனூறு ரூவா கொடுப்பாங்களாமே! இதுதான் அவள் நெஞ்சில் நிறைஞ்சிக்கும் சங்கதி.



படிப்பகம்

padippakam

புதுக்காட்டையும் தொங்க லயத்தையும் 'மாரியாத்தா' கோவிலுக் கூடாக இணைக்கும் அந்த குறுக்குப் பாதையை ஒரு முறை உற்றுப் பார்க்கிறாள்.

'பொப்பிலின்' பாவாடையும் வேலைக் காட்டு சேலையும் பழுதாகாதவாறு இடுப்பைச் சுற்றி படங்குத் துண்டால் கயிற்றால் இறுக்கிக் கட்டி ஒட்டுப்பால் போடும் குட்டிச் சாக்கை பின்புறத்தால் தொங்கவிட்டு பால் வாளி தலைமீது ஆடாமல் அசையாமல் இருக்க - இரு கைகளையுமே வீரம்மா வீசி வீசி நடக்கின்றாள் - இல்லை மெதுவாக ஓடுகின்றாள்.

கையில் பால் வெட்டுக் கத்தியை பிடித்தவாறு குறுக்கும் நெறுக்குமாக வளைந்தேடும் அக்குறுக்குப் பாதையில் தலை மீதுள்ள வாளிவிழாது அறக்கி நடக்கும் யானை - நடை அத்தனையிலும் ஒரு முரட்டுத் தனமான அழகு!

நாள் தோறும் வீரம்மாவை ஒரு தடவையாவது பார்க்காவிடில் தோட்டத்து 'பெரியையாவுக்கு தூக்கமே வராது!

கர்ப்பிணிக் கோலத்தில் குன்று மீது ஓடும் 'ரெட்டப்' பாதையில் தலைமீது வாளியை வைத்து அவளது மெல்லிடையே உடையும் வகையில் நடக்கின்றாள் பெருமாயி.

அவள் நெஞ்சத்தில் அலைமோதும் சஞ்சலங்களை ஏட்டினிலே வடிக்க பட்டினத்தார்தான் மறு பிறவி எடுக்க வேண்டும்.

போன மாசமே மழை. பத்தாததுக்கு செக்ரோல் கடன். வவுனியாவுக்கு காணி வாங்க போனதுல கையில மடியில இருந்ததெல்லாம் முடிஞ்சி போச்சி. இன்னிக்கு ஒன்னர நாளு பேரு போட்டா ஏதோ ஒரு மாதிரியா இந்த மாசத்தை ஓட்டலாம்.

பெருமாயின் வேகமான சிந்தனைக் கேற்றவாறு - அவளது கால்களும் வெட்டை நோக்கி விரைகின்றன.

எதிரே 'மாரியாத்தா' கோவில் ஒரு கரச்சலும் இல்லாம இன்னிக்கு பேருக்கு வழி வெட்டு' என்று தமது இரு கைகளையும் கூப்பி வணங்குவதில் தான் எவ்வளவு அழகு! பக்தி!

முன்பெல்லாம் புதுக்காடு திறந்தவுடன் தோட்டத்து நிரந்தர வாசிகளுக்கே வெட்டு வழங்குவதில் முதலிடம்.

அதற்கேற்ற பக்குவமும், பொறுப்பும், நேர்மையும் அவர்களிடம் தான் உண்டு என்பது நிருவாகத்தின் முடிவு!

இன்று நிலைமை மாறிவிட்டது.

பழைய ஆட்களுக்கு சம்பளம் சதக்கணக்கிலாவது அதிகரிக்க அதிகரிக்க வெட்டு வழங்குவதிலும் அரைக்கு அரைவாசி வெளியாட்களுக்கே முதலுரிமை.

பழைய ஆட்களுக்கு பழைய வெட்டுக்கள் அல்லது சில்லறை வேலைகள்.


படிப்பகம்

padippakam

மூன்று நாட்களுக்கு தொடர்ந்து வராவிடில் புதுக்காடும் கிடைக்காது பழைய காடும் கிடைக்காது.

இதனால் தான் போலும் உயிர் வீட்டிலிருந்தாலும் உடல் வெட்டுக்கு வந்து விடும்.

பெருமாயிக்கும் இந்த நிலைதான்.

வெட்டையடைந்ததும் முட்டிப் படைத்திருக்கும் வயிற்றோடு வயிறாக படங்குத் துண்டை இருக்கிக் கட்டுகிறாள் பெருமாயி.

கர்ப்பப் பையில் உள்ள அந்த பச்சிளங் குழந்தைக்கு வாய் திறந்து பேச முடியுமானால்;

அவளது சோகத் தொடர் கதையை அப்படியே சொல்லும்;

காவியமாக வடித்தால் 'தற்கால நல்ல தங்காள்' என்றும் கூறலாம்.

கையிலே கத்தியை ஏந்தி அடுத்த முறையும் ஆத்தாளை வணங்கிவிட்டு மறுமுறை மரத்தையும் வணங்கிவிட்டு குனிந்து நின்று மரத்தை வெட்டும் காட்சி!

இரண்டு மணித்தியாலத்திற்குள் 250 மரங்களும் வெட்டி முடிந்து விட்டது.

இனி சந்தேகமே இல்லை. ஒன்றரை நாள் கிடைத்து விடும்.

பரம திருப்தியோடு பக்கத்தில் இருந்த கற்பாரையில் மெதுவாக அமர்ந்து வெற்றிலையை கையில் எடுக்கின்றாள் பெருமாயி.

கண்மூடி கண் திறப்பதற்கு முன் - உலகமே இரண்டு விட்டது. பயங்கர மழை இருட்டு.

இடைக்கிடையே இடி முழக்கமும் கூட; பெயர்தான் ''புதுக் காட்டு மலை'' என்பதே யொழிய இடம் பெறும் 'வரக்கட்டு' அவளால் எழுந்திருக்க முடியவில்லை.

மலையில் விழ வேண்டிய இடி தனது வயிற்றில் விழுந்தாற் போன்றதொரு உணர்வு.

பக்கத்தில் இருந்த சிறு கற்குகையினுள் புகுந்து தன்னையும், வயிற்றில் உள்ள அந்த பச்சிளங் குழந்தையையும் காப்பாற்றியாக வேண்டுமே!

மழையா அது? மட்டக்களப்பில் பெய்த மழையையும் மிஞ்சிவிட்டது.

சிரட்டைகளில் உள்ள பாலை இயந்திரமாய் சுழன்று சேகரிக்கும் அளவுக்கு அவள் உடம்பில் வலிமை இல்லை.

கல்பொடவில் அவள் உணர்வு இழந்து கற்சிலையாக காட்சியளிக்கிறாள்.

சிரட்டையில் வடிந்த பாலெல்லாம் மழையோடு மழையாக தண்ணீரோடு சங்கமித்தது.


படிப்பகம்

padippakam

கல்விப் பகுதி

## கற்க முடியாத மாணவர்களை அடையாளம் காணலும், உதவியளித்தலும்

*முன்தொடர்*

**திருமதி சித்தி ஹுஸைமா அன்வர்தீன் பீ.ஏ.**
**நூ.மு.ம.வி. உயன்வத்தை**

கற்றலில் குறைபாடுடைய பிள்ளையை சாதாரண வகுப்பறையில் வைத்து அவனுக்கு குறைவான அவனுடைய திறனுக்கேற்ற வேலையைக் கொடுத்து அவற்றை அவன் சரியாகச் செய்யும் போது அதனைப் பாராட்டியும், புள்ளிகளை வழங்கியும் கற்றலில் உற்சாகப்படுத்தலாம்.

பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக பரிகாரக் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தியும், பரிகாரக் கற்பித்தலில் பயிற்சி நடாத்தியும், இம்மாணவரைத் தரமாக்கலாம். சிரேஷ்ட இடைமடை மட்டத்தில் கணித பாடத்தில் மிகவும் தரம் குறைந்த மாணவரின் எண்ணக்கருக்களை கட்டியெழுப்பலாம் என திருவாளர் சற்குணராஜா அவர்களின் 1991/92 ஆம் ஆண்டு ஆய்வு அறிக்கைகள் சான்று பகர்கின்றன. ''இத்துடன் ஆரம்பப் பிரிவுப் பரிகாரக் கற்பித்தலில் தாய்மொழி, கணிதம், ஆகிய பாடங்களில் ஆகக் குறைந்த மட்டத்தை நிர்ணயித்து தரம்குறைந்த மாணவர் இம்மட்டத்தை எங்ஙனம் அடையலாம் என்பதற்குப் பயிற்சிகள் கொடுத்து மாணவரின் தரத்தை உயர்த்தியுள்ளார்.

ஒரு பிள்ளை அவனது கல்வி வயதிலும் குறைவானவனாயின் அப்பிள்ளை கல்வியில் பிற்போக்கு உடையவனாக காணப்படுவான். இத்தகையோரை இளம் வயதிலேயே இனங்கண்டு அறிதல் வேண்டும். அவர்களது பெற்றோரைப் பயன்படுத்தி வீட்டிலும் விஷேட கவனிப்பையும் உதவியையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். பிள்ளை சாதாரணமானவன் போன்று இல்லையே எனப் பெற்றோர் அறிந்து விசனப்படாது பிள்ளையை மாடு, மண்டு போன்ற பொருத்தமற்ற வார்த்தைகளால் அழைக்காது அவர்களும் பிள்ளையை வழி நடாத்த வேண்டும். இத்தகைய பிள்ளைகளைக் காரணமின்றி வைப்பதும் ஏனைய ஆசிரியர்கட்கு ஏனைய மாணவர்களைக் கூடுதலான கவனிப்புக் காட்டுதலையும் தவிர்க்க வேண்டும். வகுப்பறையிலும், கற்றலில் குறைபாடுடைய பிள்ளையை வேறாகப் பிரித்து கற்பிப்பதும் தவிர்க்கப்படல் வேண்டும்.

கல்வியில் பிற்போக்குடைய இம்மாணவர் அவ்வவ் வகுப்புகளுக்குரிய சாதாரண மட்டத்தை அடைய படிப்படியாகச் செய்யப்படின் வெற்றி உணர்வுடன் உற்சாகமாகக் கற்க முன்வரலாம்.



படிப்பகம்

padippakam

# அழகியற் கல்வி (சித்திரம்) வினாவிடை

க. பொ. த. (சா/த)

1 ''சித்ராவலிய'' என்றால் என்ன? தொடர்ச்சிச் சித்திரங்கள் ஆகும். கதை போன்றவை.

2 பண்டைய சித்திரக் காரர் நிறத்தின் தன்மை கெடாமல் இருப்பதற்காக அதன் மேல் பூசப்பட்ட பூச்சை என்ன பெயரால் அழைத்தனர்? வலிச்சிகேம என்பதாகும்.

3 ''ரத்தின பிரசாத்'' எனும் காவற்சிலை எந்த நோக்கத்துக் காக அமைக்கப்பட்டது? பாதுகாப்புக்கு.

4 நடனமாது, கின்னரப் பெண் தேவதை போன்ற கலைப் படைப்புக்கள் காணப்படும் இடம் எது? எம்பக்கை தேவால யத்திலாகும்.

5 அஜந்தாக் குகைகள் எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டது? 1819ல் ஆகும்.

6 முகலாயச் சித்திர வளர்ச்சி எந்த அரசனின் காலத்தில் தொடங்கியது? அக்பர் அரசர் காலத்தில்.

7 MEANING OF ART 'கலையின் விளக்கம்' என்ற நூலை எழுதியவர் யார்? ஹேபர் ரீட் என்பவர்.

8 மெகலின் குகை எந்நாட்டில் அமைந்துள்ளது? பிரான்சில்.

9 கிரேக்க நாட்டு வண்ணம் தீட்டும் ஓவியர்களுள் ஒருவரைப் பெயரிடுக? பொலிக் கோடுஸ் என்பவர்.

10 இறுதி இராப்போசனம் என்ற சித்திரத்தை வரைந்து உலகப் புகழ் பெற்ற ஓவியர் யார்? லியனாடோ டாவின்சி.

எம். ரீ. எம். அனஸ்
கே/புதுரியா மத்திய கல்லூரி
மாவனல்லை.

—⁂—

படிப்பகம்

padippakam

ஸ்ரீ லங்கா சிகாமணி
மலையக
கலை இலக்கியப்
பேரவைக்
காப்பாளரின்

## ஆசிச் செய்தி



'ப்ரிய நிலா' தமிழ் மணி
சிவம் அவர்களை கௌரவிக்கும்
வகையில் அட்டையில் படத்தை
பிரசுரிப்பது பாராட்டப்பட
வேண்டிய செயல்.

நீண்ட காலமாக
பத்திரிகையாளராகவும்,
பொது நலப் பணியாளராகவும்
விளங்கும் சிவம் அவர்களுக்கு
எனது நல்வாழ்த்துக்கள்.

ப்ரிய நிலாவின் தமிழ்ப்
பணி தொடர எனது
நல் வாழ்த்துக்கள்!

அன்புடன்
நாகலிங்கம் இரத்தின சபாபதி
*ALL ISLAND J. P.*

*Printed at M. J. M. Printers - Mawanella.*

படிப்பகம்